Registered as a News Paper in Ceylon
P M G. No. H A 59/300 of 1939,

# உ
# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணி மாதம் 28 ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-சுங] யாழ்ப்பாணம்:- கரவரு ஐப்பசிமீ கூஉ வெள்ளிக்கிழமை (26 அக்டோபர் 1951) [இல.-ருக]

## கந்தசஷ்டி

### கந்தன் கருணை பெருகுங் காலம்

1

ஐப்பசிமாசத்துச் சுக்கில பக்ஷத்து (வளர்பிறை)ப் பிரதமை முதற் சஷ்டி திதியீறாகவுள்ள ஆறு நாளுஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுஷ்டிக்கும் விரதமே கந்தசஷ்டி விரதமாகும். கந்தக் கடவுளின் எல்லையில்லாக் கருணை பெருகுங்காலமே கந்தசஷ்டி விரதகாலமாகிய இந்த ஆறு நாளுமாம். இந்த ஆறு தினத்திலும் முருகவேள் தேவர்கள் பொருட்டுச் சூரனுடன் சமர்புரிந்து ஆறுநாள் அச்சூரனை ஆட்கொண்டு தேவர் சிறையை மீட்டருளின னென்பது கந்தபுராணம். இந்த ஆறு தினத்தும் சூரனுக்கு மறக் கருணையும், தேவர்கட்கு அறக்கருணையும் புரிந்தார் கந்தவேள் என்று சிலர் சொல்லுவார்கள்; ஆனால் உற்று நோக்குமிடத்து முருகவேள் சூரபன்மனுக்குப் புரிந்ததும் அறக் கருணையன்றி மறக கருணையல்லவென்பது நன்கு புலப்படும்.

முதன்முதற்சூரபன்மனுக்கு முருகவேள் காட்சி கொடுக்கின்றார்; எப்படி? கோர ரூபமாகவா? இல்லை! இல்லை!!

"………அனந்தகோடி ஞாயிறு
திரண்டோன்றகி ஞாலமே
லிருளை யோட்டிச்
சேவுயர் விசும்பை நீங்கிச்
செருநிலத் துற்றதென்னத்,
தூயதோர் குமரன்
போரிற் றேன்றிய
தோற்றங் கண்டான்."

அனந்த கோடிக் கணக்கான சூரியர்கள் ஒருங்குசேர்ந்து ஆகாயத்தை விட்டுக் கீழே யிறங்கிச் செருநிலத்தையடைந்தால் எப்படியான சோதிமயமாக விருக்குமோ அப்படியான பேரொளியின் தோற்றத்தையே முதன் முதற் சூரபன்மன் கண்டானும். ஆனால் அப்படியான பேரொளித் தோற்றத்தைக் கண்டு சூரன் என்ன பயனடைய முடியும்? இனி இவன் காட்டாக்கால், அவனால் இவனது திருக்கோலத்தை உள்ளபடி காணமுடியுமா? அதுவும் முடியாது; ஏன்?

"ஒளித்துல கெந்த நிற்போன்
உறுபவ மொழித்து ஞானம்
அளித்திடி னன்றி யாவர்
அவன்திறம் அறிய வல்லார்!"

இங்கே தமதுதிருக்கோலத்தை முருகன் தெரியக் காட்டுகிறான். சூரன் காண்கிறான். எவ்வாறு?

"மூண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமுங் கண்ணும்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோலமார்பும்
எண்டரு காமி ராறும்
இலகுகேழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குந்
சரணமுந் தெரியக் கண்டான்."

[எண்டரு=எண்தரு - தியானிக்கத் தக்க.]

யுத்தமுனையிலே தோன்றியவுடனே முருகவேளை ஆயிரகோடி சூரியர் ஒருங்கு திரண்டு வந்தாலனைய பேரொளியாகக் கண்ட சூரபன்மன் இப்பொழுது சண்முகப் பெருமானுடைய அருள் வடிவத்தைத் திருமுடி தொடக்கம் திருவடியீறாக ஒன்றொன்றாகத் தெரியக் கண்டானும். எவ்வாறு? இறைவன் தெரியக் காட்டினன்; சூரன், "தெரியக் கண்டான்" காட்டினல் ஆரொருவர் காணுதாரே! சூரபன்மனுக்குச் சுப்பிரமணியக் கடவுள் செய்தது மறக் கருணையானல், இந்த ஆறு முகங்களுங் கோர முகங்களாகவல்லவோ அவனுக்குப் புலப்பட்டு அச்சத்தைப் பாச, கோபத்தைபாக விளைத்திருக்க வேண்டும்? அப்படியல்ல, சூரியனுதித்த மாத்திரத்தே அலருகின்ற ஆறு செந்தாமரைப் பூக்கள்போலக் காட்சியருளினவாம் கந்தவேள் கருணைகூர் முகங்களாறும் அந்தச் சூரபன்மனுக்கு!

"இந்தத் திருக்கோலத் தரிசனம் அரிபிரமேந்திராதி தேவர்கட்குக் கிடையாதாம்! மகா முனிவர்கட்குக் கிடையாவாம். ஆனால் இவனுக்கு மாத்திரந் தன் கண்ணாரத் தரிசிக்கும்படி கிடைத்ததாம்! காரணம்? இவன் செய்த அருந் தவத்தின் பெரும் பயனும்!

"இன்னமும் முனிவர் தேவர்
யாவரும் இனைய னென்றே
யுன்னருந் தலைமைத் தாதும்
ஒருதனிக் குமரன் றன்னைத்
தன்னிரு விழியாற் கண்டான்
தானவர்க் கிறைவ னென்றல்
அன்னவன் தவத்தின் பேற்றை
யாரறிந் துரைக்கற் பாலார்."

தேவரும் முனிவர்தாமுந் தங்கள் ஞானக்கண் கொண்டுங் காணுெணுத ஆறுமுகன் திருக்கோலத்தை இந்த அசுரத் தலைவன் தன்னுடைய இரண்டு ஊனக்கண் கொண்டு கண்டானென்றல், இவன் செய்த அருந் தவத்தின்பொருட்டு அவன் அருள் செய்தானென்று சொல்வதல்லாமல் வேறென்ன சொல்வது!

இப்படியான திருவருளைப் பெற்ற சூரபன்மனைத் தீயவன் கொடியவனென நாம நினைப்பது தவறு: சூரபன்மன் முதலான அசுரர்கள் பிறந்ததும், அருந்தவஞ் செய்ததும, வரம்பெற்றதும, தேவர்கட்கு இடர் புரிந்ததும சிவாஞ்ஞைப்படியேயாகும்; சிவனை நிந்தனை செய்து புறக்கணித்துத் திருமாலை மேலான தெய்வமெனக் கொண்டு வேள்வி செய்த தக்கனையும், அவனுக்கு உடன்பாடாய் நின்று அந்த யாகத்திற் பங்குபற்றிய தேவர்களையும் வீரபத்திரக் கடவுள் தண்டித்தும், சிவத் துரோகமாகிய பாதகம எஞ்சியிருந்தமையினுல், அப் பாவத்தையுஞ் சூரன் முதலியோர் மூலமாகத் தண்டித் தொழித்தற்பொருட்டே இறைவன் சூரபன்மன்முதலானோர்க்குப் பெரும் வாங்களைக் கொடுத்தருளினர்; எனவே இறைவன் ஆஞ்ஞையைச் செய்தற்கே சூரபன்மன் முதலியோர் தோன்றி, அங்ஙனஞ் செய்தனர்; ஆனதினால் சூரபன்மன் பொல்லாதவன் என்று நாம் சொல்வது அறியாமையின் பாற்படுமாம், அவன் தேவர் முனிவர் முதலானோரைக்காட்டிலும் மேலான தவப்பேறுடையவனும்; இதனை எங்கள் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் படிப்போருள்ள முருக எடுத்துக் கூறுகின்றார்:-

"பூவுலகண்ட மெல்லாம்
புரந்திடுஞ் சூரன்றன்னைத்
தீவினையாள னென்றே செப்புவர்,
சிறப்பின மிக்க
மூவிருமுகத்து வள்ளல்
முன்னர் வந்தெய்தப் பெற்றன்,
ஆ! இவன் தவத்தி கன்றி
அறத்தினுந் முதல்வ னன்றே!"

இந்தச் சூரபன்மன் தான் செய்யப் பிறந்த கருமமாகிய தேவரைத் தண்டிக்குஞ் செயலுக்கு இவனுக்குப் போற்றல், இலகுவில் அழிவுறுத டாக்கை சூரத்துவம் அகங்காரம் மமகார மென்னு நிலைவகளெல்லாம் இன்றியமையாதனவன்றோ! அவற்றையெல்லாம் அவனுக்கு ஈந்தருளிய இறைவன், அச் சூரன் வந்த கருமம் முற்றிய பின், அவனிடத்துள்ள ராசத குணங்களையொழித்து அவனுக்கு ஞானத்தைப் பாலித்தற்குத் திருவுளங் கொண்டு ஒருவிளையாட்டாக அவனுடன் சமர் செய்வான் வந்தாரேயொழிய, அச் சூரனுக்கு மறக் கருணை புரிந்து அவனை யாட்கொள்ள வந்திலராம். இதனைப் பின்வரும் திருவிருத்தம் இனிதெடுத்து விளக்குகின்றது:-

"போருசமர் விளைப்பான் போலப்
போருக்கெனப் போந்து சூரன்
இருவிழ் தன்னிற் காண்பான்
எளதுதன் வடிவங்காட்டி
அருளது புரிந்தா னென்னில்
ஆதியங் குமரன் மாயத்
திருவிளையாடல் யார்க்குந்
தெரிகில போலுமன்றே"

—

## பவுண் விநியோகம்

### புதிய ஒழுங்குகள்

ஆபரணங்களுக்குப் பவுண்தேவைப்படும் பொன்வினைஞர் நகைவியாபாரிமார் விவாகத்திற்காகிய கன்னியர் யுவர்கள் என்போர் அனுப்பும் விண்ணப்பங்கள் மத்திய "வங்கி"யில் வந்து குவிகின்றனவாம். இவர்கள் யாவர்க்கும் பின்வருமாறுபதில் அனுப்பப்படுகிறது:-

"பவுண் வாங்குவதற்கு அரசாங்க அனுமதிபெற்றுள்ளோர்க்கு அரசாங்கம் விநியோகஞ்செய்யும். மத்திய வங்கியில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விலைப்படி பவுண் விற்பதற்கான ஒழுங்குகள் ஆலோசனையிலிருக்கின்றன. பவுண் வாங்குதற்கு அனுமதி அளிக்கப்பட்டதும் அரசாங்கம் இவ்வொழுங்கைப் பிரசித்தப்படுத்தும்" சோரமாய்ப் பவுண் இறக்குமதி செய்வோரதும் சோர வியாபாரத்தில் ஈடுபட்டிருப்போரதும் சூழ்ச்சிகளை மேற்கொள்ளும் பொருட்டே இவ்வொழுங்கு செய்யப்படுகிறது. இலங்கை நகைவியாபாரிமார்களும் இரத்தின வியாபாரிமார்களுஞ் சேர்ந்த சங்கத்தை அரசாங்கம் இது விஷயமாக உசாவினபோது அச்சங்கம் மேல் வருமாறு அறிவித்தது. 1. பவுண் மாசக்தோறும் விநியோகஞ்செய்யப்படல்வேண்டும். 2. பவுண் விலை வாரந்தோறும் நியமிக்கப்படவேண்டும். 3. இந்தியாவின் பவுண்விலையிலும் பார்க்க இலங்கையின் விலை 5% வீதமாவது கூடுதலாயிருத்தல் வேண்டும். 1951ம் வருடத்தின் பின் அரைவாசியாகிய ஜூலை-டிசெம்பர் மாதங்களுக்குரிய பவுண் பங்கீடு எவ்வளவென்பதும் என்ன விலைப்படி விநியோகஞ் செய்யப்பட வேண்டுமென்பதும் இன்னும் நிச்சயிக்கப்படவில்லையென மத்தியவங்கி அறிவிக்கிறது. நகை வியாபாரிமார் இப்போதைக்குச் சோர விலைக்குத்தான் பவுண் வாங்க வேண்டியிருக்கிறது. சோரமாய் விலைப்படும்பவுண் விலை விழுந்துவிட்டது. ஒரு தங்கப் பவுணின் இன்றைய விலை ரூபா 77 இருவாரங்களுக்கு முன் ரூபா 82 ஆகவும் அதற்குமுன் ரூபா 90 ஆகவுமிருந்தது. ——

## சமய தீட்சை

யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபை யாதரவில் ஷெ சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் பள்ளிக்கூட மாணவ மாணவிகளுக்கும் பிறருக்கும் சமய தீட்சை நீராவிமடம் ஸ்ரீமத் க. வைத்திய நாதக் குருக்களால் 21—10—51 ஞாயிற்றுக்கிழமை பன்று செய்யப்பெற்றது என அறிகிறோம்.

—

உ

## தோத்திரம்

பண் – பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்

திரிதரு மாமணி நாடகமாடத் திளைத்தொரு நியழல்வாய்
எரிகதிக்க வெரியேந்தி யாடும் நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்த மிலங்குகானல் இராமேச் சரமேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி விமலர் செயுஞ்செயலே.

தேவியை வவ்விய தென்னிலங்கை யரையன் திறல்வாட்டி
வவியல் வெஞ்சிலை யண்ணனண்ணும் இராமேச் சரத்தாரை
நாவியன் ஞானசம் பந்தனல்ல மொழியா னவின் றேத்தும்
பாவியன் மாலைவல்லா ரவர்தம்வினை ஆயின பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்தசுவாமிகள்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கர ௵ ஐப்பசி மீ ௯ ௳ வெள்ளிக்கிழமை


## முன்னோர் தீபாவலியை அநுட்டித்தமுறை

வருகிற திங்கட்கிழமை (29-10-51) தீபாவலிப் புண்ணியத் தினமாகும்; இத் தீபாவலியின் உற்பத்தியையும் இதனைச் சைவமக்களாகிய நாங்கள் அநுட்டிக்க வேண்டிய முறையையும் இப்பத்திரிகையில் முன்னர்ப் பலமுறை எடுத்துக்காட்டியுள்ளோம்; எனினும், வைதிகக் கொள்கை பூண்ட சிலரொழிய, பலர் இன்னமும் இத் தீபாவலித் தினத்தை உண்டாட்டுக் களியாட்டிற்குரிய தினமாகவே கழிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்.

தீப + ஆவலி, என்னுஞ் சொற்களே சேர்ந்து தீபாவலியென வந்ததென்றும், தீபம் என்றால் விளக்கு, ஆவலியென்றால் நிரை, இல்லையேல் வரிசை என்றும், கிருஷ்ண பக்கத்துச் சதுர்த்தசிதிதி யன்று சந்திரோதய காலமாகிய புலரிக்காலத்தில் நித்திரைவிட்டெழுந்து அவசிய கருமம்முதலியனமுடித்துக்கொண்டு தமது இல்லத்தில் ஒரு தானத்திலே தீபங்களை நிரையே ஏற்றி, அவற்றின் முன்னிருந்துகொண்டு தலைக்கு எண்ணெயிட்டுச் சிறிது ஊறவிட்டபின் சுத்தமான நீர் நிலையை இல்லையேற் கிணற்றை யடைந்து சிகைக்காயேனும், "அரப்பு"எனப்படும் இருப்பைப் பிண்ணாக்கேனும் எலுமிச்சம் புளியோடு சேர்த்துத் தலைக்கிட்டுத் தண்ணீரேனும் வெந்நீரேனுங்கொண்டுமுழுகிக்கோடிவஸ்திரந் தரித்துக் கொண்டு சந்திவந்தனமுதலிய காலைக் கடன் முடித்துத் தாம் வழிபடுதெய்வம் எழுந்தருளிய கோயிலுக்குப் போய், அங்கு அதிகாலையில் நடப்பதாகிய தீபாவலி விசேட பூசைப்போது சுவாமி தரிசனஞ் செய்து, மீண்டுவந்து மனைவி மக்கள் சுற்றத்தார் முதலியோருடன் தாயபோசனம் அருந்துதல் வேண்டுமென்றும் பெரியோர் சொல்லவும் அப்படியே செய்யவும் நாம கேட்டுங் கண்டுமுள்ளோம்.

தீபாவலித் தினத்திற்கு முதனாளே,மூர்த்திகட்குஎண்ணெய்க் காப்பிடும்படி நல்லெண்ணெயும் இளநீர் முதலிய அபிடேகத் திரவியங்களும், பட்டுப் பரிவட்டமும் தாங்கள் வழிபடுங் கோயிலுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பார்கள், பால், தயிர் போன்ற அபிடேகத் திரவியங்களைமாத்திரம் அன்று விடியற்புறத்திற் கொண்டுபோய்க் கொடுப்பார்கள் நம் மூதாதையர்.

இனி, எங்கள் மூதாதையராயுள்ள செல்வர் பெரியாராயுள்ளவர்கள், இப்படியான தீபாவலி வேளையில், தமக்கும் தம்மனைவி மக்களுக்கும் மாத்திரம் கோடியெடுத்துக் கொள்வதோடமையாது, "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றபிரகாரம் தம்முடைய உற்றார் உறவினருக்கும், ஏழைகளுக்கும் கோடிப் புடைவை வாங்கி வழங்குவர்; ஒருவருடைய மானத்தைக் காப்பதற்கு உடை இன்றியமையாததாலால், எல்லாத் தானங்களிலும் வஸ்திரதானமே மேலான தெனலாம். இப்படி மேலான முறையிலேயே எங்கள் முன்னோர் தீபாவலியை அக்காலத்திற் கொண்டாடி வந்தனர்; அவர்களுடைய வழித்தோன்றல்களாயுள்ளார் சிலர் இன்றும் அப்படியே செய்து வருகின்றனர்.

ஆனால் இக்காலத்திற் பலர் தொன்மையை மறந்து, இந்தத் தீபாவலியை ஒரு உண்டாட்டுக் களியாட்டு நாளாகக் கொண்டாடத் தலையிட்டும், மதுவுண்டு வெறிகொண்டு ஆடு கோழியடித்துக் கொன்று இறைச்சி சமைத்துண்டு, தெய்வ வழிபாட்டை மாத்திரமல்ல, தெய்வத்தையும் மறந்து சண்டையிட்டுக் காயம் விளைத்துந் தீராச் சங்கடங்கட்கும் பழிபாவங்கட்கும் ஆட்களாகிறார்கள்! ஐயையோ! இது என்ன அறியாமை!! இவர்கள் தாம் கெட்டுப்போவதோடமையாது, தம் மனைவி மக்களையும் அறியாமையின்பாற்பட்ட அயலோரையுங் கெடுத்துவிடுகின்றார்களே! இவ்வாறு முறை திறம்பித் தீபாவலி கொண்டாடுவதைக் காட்டிலும் இதனை அறவே கொண்டாடாதுவிடுதல் நன்மையாகும்! இப்படியெல்லாம் அக்கிரமங்களைச் செய்துகொண்டு, நாட்டிலே கால மழை பெய்யவில்லை, பஞ்சம்பசியதிகப்படுகின்றன, களவு மிகுக்கின்றது என்று சொலவது பேதைமையன்றோ! நாட்டிலே விளையும் நன்மையுந் தீமையும் எங்கள் வாழ்க்கை முறையைப் பொறுத்திருக்கின்றன; தீமை செய்துகொண்டு நன்மையை எதிர்பார்க்கலாமா!

### சைவப் பிரசங்கம்

காரைநகர் கருங்காலிச் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் நிகழும் ஐப்பசி மீ ௨ ௳ (19-10-51) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர்ச் சைவமகா சபைத் தலைவர் ஸ்ரீ சி. சுப்பிரமணிய தேசிகர் அன்புநெறி என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த பிரசங்கஞ் செய்தார். சைவசமயிகள் அன்பு நெறியில வளர்ச்சியடைதல் சிவபெருமானின் திருவருளைப் பெறுதற்குச் சிறந்த சாதனமாகுமெனக் குறிப்பிடப்பட்டது. —கடித.

## விசேட விஞ்ஞாபனம்

வருகிற திங்கட்கிழமை (29—10—51) தீபாவலியை யுத்தேசித்து இந்துசாதனாலயம், சைவப்பிரகாச யந்திரசாலையென்னுமிவற்றிற் கடமையாற்றுவோர்க்கு விடுமுறை உதவப்படுதலால், இத் தாபனங்களிரண்டுங் குறித்த தினத்திற் பூட்டப்படும்; இதன்பயனாக அடுத்த நாளாகிய செவ்வாய்க்கிழமை (30—10—51) ஆங்கில தமிழ் இந்துசாதனப்பிரசுரங்கள் வெளிவரா என்பதை அபிமானிகட்குத் தெரிவிக்கின்றோம். —மனேஜர்.

## யாழ்ப்பாண நகரசபை

### இரண்டு லக்ஷரூபாவரையிற் சேமித்தது

யாழ்ப்பாணம் நகர பரிபாலன சபையின் அரசிறைவருவாய் 1950ம் ஆண்டில் அதற்குமுற்றின வருடத்திலும் பார்க்க ரூபா 75000 கூடியிருக்கிறதாம். நகரசபைத் தலைவர் திரு C. பொன்னம்பலம் தமது வருடாந்த அறிக்கையில் இங்ஙனம் வெளியிட்டிருக்கின்றனர். 1950-ம் ஆண்டில் வரிப்பணம் செலுத்திய தாபனங்களின் தொகை 13.589 எனவும் 1949ம் ஆண்டில் வரிசெலுத்திய தாபனங்கள் 13,677 எனவும் அறிவிக்கப்படுகிறது. 1950ம் ஆண்டில் அறவிடாமல் நிறுத்திவிடப்பட்டவரிப்பணத்தொகை ரூபா 2545 சதம் 13. 1949ம் ஆண்டில் கழிவாய்விடப்பட்ட வரிப்பணத்தொகை ஆக ரூபா 15. நகரத்துக்குத் தண்ணீர் விநியோகஞ்செய்யுந் திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு சுகாதார தல ஆட்சி மந்திரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கம் அத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

## பெற்றோர் தின விழா

### மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை

இந்த 5 ௳ (22-10-51) திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் இவ்விழா பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஸ்ரீ C. இராசநாதன் தலைமையில் தேவாரத்துடன் ஆரம்பமானது. பகுதி வித்தியாதரிசி ஸ்ரீ V. துரைசிங்கம் பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்தனர். பின்னர் வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் முன்னுரைப்பின் வந்தனப்பாவும், பாடசாலைப்பாவும் மாணவிகளாற் பாடப்பட்டன. தலைமை ஆசிரியர் தமது அறிக்கையைவாசித்தார் பின்னர் வித்தியாதரிசி ஸ்ரீ V. துரைசிங்கமும் ஸ்ரீ S. தனபாலசிங்கமும், முகாந்திரம் M. கிருஷ்ணரும் சொற்பொழிவாற்றினர். பின்னர் மாணவர்களின் பாட்டு, பேச்சு, நடித்தல், கோலாட்டம், நடனம், ஆங்கிலப் பேச்சு என்னும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன்பின் முகாந்திரம் M. கிருஷ்ணர் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். முகாமையாளர் திரு A. K கனகரத்தினமும், பழைய மாணவரும், ஆசிரியர் ஸ்ரீ மு. சதாசிவமும் குறிப்புரை கூறினர். தலைமையாசிரியரின் நன்றியுரையுடனும், தேவாரத்துடனும் விழா பூர்த்தியாயிற்று. —கடித.

## ஸ்ரீ நடேசர் படத்தாபனம்

கட்டுடைச் சைவ வித்தியாசாலையில் ஓர் நடேசராலயம் அமைத்து ஷை ஆலயத்திற் படஅமைப்பு விழா (10-10-51) புதன்கிழமை பகல் 10 மணிவரை நடைபெற்றது. மேற்படி திருவுருவப்படம் பகுதி வித்தியாதிகாரி திரு. அ. சரவணமுத்துவால மேளவாத்தியத்துடன் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு ஆலயத்துள் வைக்கப்பட்டது. பிரமஸ்ரீ அ. சதாசிவக் குருக்கள் ஆராதனை செய்தார். அநேகர் வந்து கூடினர். பின்பு மேற்படி வித்தியாதிகாரியால் ஓர் சொற்பொழிவு நடாத்தப்பட்டது.

— கடித

## குதிரைப் பந்தயச் சீட்டுப் பரிசுகள்

மெல்போணில் நிகழுங் குதிரைப் பந்தயத்தை யொட்டி காலி ஜிம்கானா கூட்டத்தால் நடத்தப்படும் சீட்டுப் பந்தயத்தில் முதல் மூன்று பரிசுகளும் இலங்கைவாசிகளுக்குக் கிடைத்திருக்கின்றன.

பரிசு விவரங்கள் வருமாறு:—

(1) திரு. S. S. சிவபாக்கியம் (46) டிமேற்பாதோட்டம் பசறை. முதலாம் பரிசாக ரூபா 238,752 வெற்றிபெற்றார். இப்போது இவர் இருக்குந் தோட்ட மேற்பார்வை உத்தியோகப் பதவியில் இனிமேலும் (Conductor) இருப்பதாகவும், தாம் பெற்றபாக்கியத்தில் ஒரு பாகத்தை மார்க்க பரிபாலனத்தின் பொருட்டு நன்கொடையாக வழங்கச் சித்தமாயிருப்பதாகவுங் கூறினாராம். (2) திரு. Y. M. நிஸார், காலிவீதி, மவுன்ற் லவீனியா, இவர் இரண்டாம் பரிசாக ரூபா 119,276 பெறுகின்றனர். (3) திருமதி மாதர் பீபீ, கண்டிவீதி, மாத்தளை. இவருக்கு மூன்றாம் பரிசாக ரூபா 59,683 கிடைத்திருக்கிறது.

## புகையிலைச் செய்கைபற்றிய அறிக்கை

கிருஷிகப்பகுதி மந்திரி இலங்கையில் புகையிலைச் செய்கையைப்பற்றி அறிக்கை செய்யும்படி நாலுபேர் கொண்ட ஓர் சபையை ஏற்படுத்தி, அதன் தலைவராக பிரபல வழக்கறிஞராகிய திரு. T. C. இராசரத்தினத்தை நியமித்துள்ளனர், திரு. A. B. அட்டிக்கலை, புகையிலை உத்தியோகத்தர், கிருஷிகப் பகுதி; திரு. J. E. R. ஹென்ஸ்மன், கைத்தொழிற் பகுதியின் உதவி அதிகாரி; திரு. F. A. சந்திரசேகரம், கூட்டுறவுச் சங்கங்களின் உதவிப் பதிவு உத்தியோகத்தர் என்போர் ஏனைய அங்கத்தினராவர். திரு. அட்டிக்கலை இச்சபையின் காரியதரிசியாய்க் கடமை ஆற்றுவர். புகையிலைச் செய்கை வட இலங்கையின் பொருளாதார நிலைக்கும், யாழ்ப்பாண வாசிகளுட் பெருந்தொகையானோரின் ஜீவனத்துக்கும் ஏதுவாயிருத்தலின் இத்தொழிலின் இக்கால நிலைமையை ஆராய்தற்கே சபை நியமிக்கப்பட்டது. இத்தொழிலைப் பாதுகாப்பதிலும விருத்தி பண்ணுவதிலும் அரசாங்கம சிரத்தை கொண்டிருக்கிறது. புகையிலைச் செய்கையை யிட்டும, விற்பனையை யிட்டும ஆராய்ந்து தொழிலைச் சீர்ப்படுத்துதற்கும விருத்தி பண்ணுவதற்கும செயற்பாலனவற்றை அறிவிக்கும்படி சபை கேட்கப்படுகிறது.

தமது புகையிலையை விற்பதற்கு ஒரே ஒரு இடத்தையே எப்போதுந் தஞ்சமெனக் காத்திருக்கும் நிலைமையால தொழிலுக்குப் பங்கம் வராதபடி தொழிலைப் புநருத்தாரணஞ் செய்யும் முறைகளையே விசேடமாகக் கொண்டு மனப்பான்மையோடு புகையிலை விசாரணைச் சபை விசாரணை செய்யுமாம். வட இலங்கையில் "சிகறற்" (Cigarette) புகையிலை முதலிய இதர இனப் புகையிலையை அனுகூலமாய்ச் செய்கை பண்ணலாகுமா வென்பதும், அங்ஙனஞ் செய்கைபண்ணப்படின் அப் புகையிலை எப்போதும் விலைப்படுமோ வென்பதும இச்சபை யனறி ஆலோசிக்கவேண்டிய விஷயங்களாம்.

## தேவை

பன்னவேலை ஐந்தாம் பிரிவில் சித்தி பெற்ற ஆசிரியை தேவைப்படுகிறது. தமிழ் S. S. C. பரீட்சையில் அல்லது ஆங்கிலம் J. S. C. பரீட்சையில், வீட்டுப் பணியில் (தையல் வேலை உட்பட) சித்தியடைந்த ஆசிரியை விசேஷமாகக் கவனிக்கப்படும்.

31-10-1951 முன்னதாகக் கைதடி சைவ ஐக்கிய சங்கக் காரியதரிசிக்கு மனுச் செய்க.

M 119 23, 26—10—51.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு
தவசி - வல்லிபுரம் வழக்காளி
இல. 7363 எதிராக
வண்ணார்பண்ணை மேற்கு

1. சபீப் முகமெட் முகமெட் புகாரி மொகிடீன் பள்ளிவாசல் றோட்டு
2. பெண் முகமெட் பதுமாசாச்சிபா வண்ணார்பண்ணை மேற்கு
3. ஒஸ்மன் லெபு முகமெட் ஸ்மெயில் தயிக்க றோட்டு லெபி. சகுல். எபீட்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7363-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகளை, 1951-ம் ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 15-ந் திகதி (15-11-51) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 397-75-ம், இதில் ரூபாய் 370க்கு 11-12-50 திகதி தொடக்கம 15-5-51 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 162-57 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை "உலையடியும் மறுபிரிவுகளும்" கிலைப்பரப்பு (2-ம்) குளி $10\frac{9}{16}$-ம் இது உலாந்தா பி. இராமநாதனல் 1943-ம் ஆண்டு கார்த்திகை மாதம 13-ந் திகதி 601-ம் இலக்கப்படத்தில் லொற் 11க்குக் குளி ($3\frac{1}{4}$ம்) அதையும் விருத்தையும் முற்றும் எல்லை கிழக்கு லொற் 10. வடக்கு லொற் 4-ம் 5-ம. மேற்கும் தெற்கும் மீரு முகடீன் முகமெட் மரியாம்புவின் ஆதனம் இதடங்கலும்.

2. மேற்படி வண்ணார்பண்ணை மேற்கிறை "உலையடியும் மறு பிரிவுகளும்" குறித்த படத்தின்படி லொற் 1-5-6 8க்கு கிலைப்பரப்பு (1-ம்) குளி $6\frac{3}{16}$-ம் கட்டிடங்களும் செய்பயிர்களும கிணறும் கரகசும் எல்லை கிழக்கு மீரு பெண் முகமெட் மரியாம்புவுக்கும முகடீன சற்கு லாஸ் பெண் மொகடீன் நாச்சிபாவக்கு முரிய ஆதனங்கள் வடக்கு மொகடீன நாச்சியாவின் ஆதனம் மேற்கு றோட்டும் 2-4-9-ம தெற்கு யூசப் சகீப கச்சு முகமெட்டுக்கும் லொற் 2-4-11-10-9 ம மீரு மொகடீன பெண் முகமெட் மரியாம்புவுக்குமுரிய ஆதனம். இதில் லொற் (6) யூசுவ் சகிப் முகமெட் ஸ்மெயில பெண் கதியாஉம்மாவுக்கும் வடகிழக்குப் பக்கத்தில் பாவிக்கும் உரித்தும் புறநீங்கலாக மிகுதியில சொரியலாய் மூன்றில ஒரு பங்கு ($\frac{1}{3}$).

3. மேற்படி வண்ணார்பண்ணை மேற்கிறை "உலையடியம் மறு பிரிவுகளும்" லொற் 7க்கு குளி ஒன்று (1-ம்) கட்டிடங்களும எல்லை கிழக்கும வடக்கும மேற்கும் தெற்கும் மேலே விபரிக்கப்பட்டிருக்கும 2-ம் ஆதனம், இதிற் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$).

4. மேற்படி வண்ணார்பண்ணை மேற்கிறை "உலையடியும் மறு பிரிவுகளும்" லொற் (6) இது இரண்டாம் ஆதனத்தை சேர்க்கப்பட்டது.குளி $\frac{3}{4}$-ல் எல்லை கிழக்கு லொற் 7. வடக்கும் மேற்கும் தெற்கும 2-ம் ஆதனம்,இதில் யூசவ் சகிப்முகமெட் ஸ்மெயில்பெண் கதியாஉம்மா சிவிப்புரித்துப் புற நீங்கலாக மிகுதி யடங்கலும். முற்பதிவு D $\frac{172}{208\ 210}$

சின்னத்தம்பி. சங்கரப்பிள்ளை
Commissioner and Licensed Auctioneer.

தெல்லிப்பழை
1—10—1951.

M 121 26—10—51.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல. 3806.

சங்குவேலி, தற்போது மானிப்பாயில் வசிக்கும்:

1. கன்னித்தம்பி சபாரத்தினம்
2. பெண் இளையபிள்ளை அல்லது மகேஸ்வரி

இவர்களுடைய தத்துவகாரன்;
சின்னத்தம்பி தம்பையா

—வழக்காளிகள்.

எதிராக

கொக்குவில், காலஞ்சென்ற வயிரமுத்து சமசிவாயத்தின் ஆதனத்துக்குப் பராபரிப்புக்காரனுகிய சங்குவேலி,
குமாரவேலு செல்லையா

—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 3806-ம் இலக்கத்தில் எனக்கு இடப்பட்ட கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1951-ம் ஆண்டு கார்த்திகை மீ 24-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 1-ம் காணியும் 10 மணி தொடக்கம் 2-ம் காணியும் பிரசித்த ஏலத்தில் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று விற்கப்படும்,

தீர்வைத் தொகை:— ரூபா 550-ம கோட்டுச் செலவு ரூபா 114-70ம். இதில் முன் கொடுபட்ட தொகை ரூபா 351 போக மிகுதி ரூபா 318-70.

### காணி விபரம்

(1) வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை "சீர் கொசசிதாள்வு" கிலப்பரப்பு 9. குளி $2\frac{1}{2}$ வீடும் பயிர்வகைகளும், கிணறும். எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு, கையொழுங்கை, மேற்கு வயிரமுத்து சமசிவாயத்தின் உரிமைக்காரரினுதனம், தெற்கு வல்லிபுரம் கைம்பெண் அன்னமுத்துவினுதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும், அதைச் சேர்ந்தவைகளும்.

(2) வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோயிற்பற்று, கொக்குவிலிறை "ஆணடிப்புலம்" கிலப்பரப்பு 2. குளி 11. பயிர்வகைகளும் மேற்செல்லக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் மூன்றில் இரண்டு பங்கும்; தென்மேற்குப் பக்கமாக நாலு முழ அகலம் கொண்ட பாதையால் சொல்லப்பட்ட கிணற்றுக்குப் போக்குவரவு செய்யும் உரிமையும். எல்லை: கிழக்கு, வயிரமுத்து சமசிவாயத்தின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு கையொழுங்கை, மேற்கு தில்லைநாதி இராமலிங்கத்தினுதனமும், சொல்லப்பட்ட நாலு முழப் பாதையின் முகப்பும், தெற்கு வயித்திலிங்கம் கைம்பெண் அன்னமுத்துவினுதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

பொன்னம்பலம் அப்பையா
கொம்மிஷனர்.

கொக்குவில், 24-10-1951

M 123 26— 0—51.

மெய்கண்டதேவ நாயனார்

# குருபூசை

இம்மாதம் கஙு-ந்உ (30-10-51) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் மெய்கண்ட தேவ நாயனார் குருபூசை கீழ்க்காணும் கிரமப்படி ஷை சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்:

மாலை 6—$6\frac{1}{2}$ கடவுள் ஆராதனை
திருமுறைப் பூசை

இரவு $6\frac{1}{2}$ மணி தொடக்கம்:
நீராவியடி மடம் ஸ்ரீமத் ச. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில்,
"மெய்கண்ட தேவர்"
என்னும் பொருள்பற்றி
பண்டிதர் பிரமஸ்ரீ வ மு. இரத்னேசுவர ஐயர் அவர்களும்,
திரு.வே சோமசுந்தரம் அவர்களும்
பிரசங்கஞ் செய்வார்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 24-10-51.

M. 125 26—10-51.

நயினாதீவு
## ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

1950-ம் ஆ. ஆவணி மீ 1-ந் திகதி முதல் 1951-ம் ஆ. ஆடி மீ 31-ம் திகதி முடியவுள்ள காலதது வரவு செலவுக் கணக்கு

| | |
|---|---|
| **செலவு** | |
| தொழிலாளர் சம்பளம் | 7606 80 |
| மகாநவராத்திரிபூசை | 1129 68 |
| திருவெம்பாவைப்பூசை | 187 33 |
| தினசரிப்பூசை | 2117 02 |
| திருவிழா | 7666 00 |
| காகிதாதி அச்சுவேலை | 192 92 |
| வழக்குச்செலவு | 3126 47 |
| வாலஸ்தாபனம் | 560 44 |
| பல வினச்செலவு | 1172 48 |
| செலவு நீக்கி இருப்பு | 5806 04 |
| ஆகமொத்தம் | 29565 13 |
| **வரவு** | |
| கோவிற்கடைக்குத்தகை | 1540 35 |
| முடிக்குத்தகை | 614 50 |
| கந்தசஷ்டி பூசை | 44 92 |
| மாதாந்த அர்ச்சனைக்கட்டளை | 75 00 |
| சந்திக்குத் தண்ணீர் வார்த்தல் | 39 89 |
| அடிமைச்சாதனம் | 168 00 |
| திருவிழா | 10490 44 |
| சகஸ்திரநாம அர்ச்சனை | 1677 00 |
| மூலஸ்தானச்சாந்து | 1115 00 |
| அபிஷேகம் | 482 70 |
| பூசை | 2422 67 |
| மாதாந்தக் காணிக்கை | 8270 66 |
| வாக்காளர் கட்டணம் | 540 00 |
| நெல்விற்பனவு | 1721 00 |
| புங்குடுதீவு நெல்வயல் | 274 50 |
| அன்னப்பிராசனம் | 47 00 |
| கர்ணவேதனம் | 42 00 |
| | 29565 13 |

### நீட்டக் கணக்கு

| | |
|---|---|
| க கா. அ. கோவில் | 48611 50 |
| மு. சி. துரைசாமி | 2 50 |
| மு. வைரவநாதக்குருக்கள் | 77 86 |
| கா. பொன்னம்பலம் | 254 95 |
| விவேகானந்த பிறஸ் | 203 00 |
| S. K. முருகையா | 116 00 |
| கா. ஆறுமுகம் | 100 00 |
| பவுண் இருப்பு | 153 35 |
| இருப்பு. 1-8-50 ல் | 9017 41 |
| இருப்பு. 31-7-51 ல் | 5806 04 |
| ஆகமொத்தம் | 64342 61 |
| தனபாட இருப்பு 1-8-50 ல் | 10265 10 |
| ஷை 31-7-51 வரை | 515 36 |
| சிருவாபரணம் 1 8-50 ல் இருப்பு | 7297 75 |
| ஷை 31-7-51 வரை | 424 75 |
| சிலா விக்கிரகமூர்த்திகள் | 112 75 |
| வாகனம் | 4784 75 |
| இருப்பு வெள்ளிக்காணிக்கை | 186 15 |
| பசுமாடு | 155 70 |
| நெல் | 988 90 |
| பண்டிகைச் செலவ | |
| சன்னிகாடை 304/= நீக்கி | 16274 40 |
| கும்பாபிஷேகம் | 8020 98 |
| திருப்பணிகொட்டகைவேலை | 1516 59 |
| ச. சபாபதிப்பிள்ளைவசம் அட்வான்ஸ் | 81 5 00 |
| வருமதி— V. A. துரையப்பா | 700 00 |
| வே விசுவலிங்கம் | 147 00 |
| S. N. கந்தையா | 143 00 |
| S. இரகுப்பிள்ளை | 9 50 |
| பலவினம் | 2974 38 |
| ரொக்கம். கச்சேரியில் | 525 38 |
| மெக்கன்டல் பாங்க் | 500 00 |
| கையிருப்பு | 655 17 |
| ஆக மொத்தம் | 64342 61 |

பரிபாலனசபையார்.
22-10-1951.

பரிசோதிக்கப்பட்டதில் யாவும் சரியாயிருந்தன.

M. செல்வரத்தினம்
பதிவுபெற்ற எக்கவுண்டனும் ஓடிற்றரும்,
யாழ்ப்பாணம், 20-9 51.

M. 120 26—10—51.

# நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (28-10-51—3-11-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

சில காலத்துக்குத் தேக சுகக் குறைவுண்டு; குடும்பத்திற் பிணக்கும் நேரும்; வியாழன் வெள்ளிக் கிழமைகளில் அவதானமாக நடந்து கொள்ளவும்; கிழமை முடிவில் அன்னியராலுதவியுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

இந்தக்கிழமை சில அனுகூலமான கருமங்கள் செய்ய வேண்டிவரும்; குடும்ப ஒற்றுமையும் புகழுமுண்டு; பெண்களாலுதவியுண்டு; காதிராப் பிரகாரம நன்மையுண்டு; ஆனால் கிழமையின் கடைசி நாட்களில் அவதானமாக நடந்து கொள்ளவும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

பொருள் வரவு இருந்தாலும் இந்த வாரத்திற் செலவுக்குப்போதாதாம்; தேக சுகக்குறைவு நேரும்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

வழக்கமான வருவாயைக் காட்டிலும் இவ்வாரத்தில் மேலதிகமான வருவாயுண்டு; உன் மர்மங்களைப்பிறருக்கு வெளியிடாதிருந்தால்சிறிது துயர்ச்சியுண்டு; சில காலத்துக்குக்குடும்பஒற்றுமையில்லையாம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம பாதம்.

இவ்வாரத்திற் குடும்ப ஐக்கியக் குறைவு; பிணக்குஞ் சண்டையும் நேரும்; கோபத்தை அடக்க வேண்டும்; கிழமை முடிவிற் பொருள் நட்டமுண்டாம்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

அற்ப பிணக்குகளும் மனச் சஞ்சலமுமுண்டு; ஆனும் சத்துருக்களைச் சயிக்க முடியும்; அவசரப்பட்டுக் கருமஞ் செய்வதில் முரண்பாடான செயல்களையுந் தவிர்த்துக்கொள்க.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3 ம் பாதம்.

எவ்வளவு முயற்சி செய்தாலும் லாபமடைவது கஷ்டம்; அற்ப சுகயீனமும் உத்தியோகக் கஷ்டமு முண்டு; பெருங் கருமங்களைச் செய்யாது தவிர்விடுக.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

நன்மைக்கான மாறுதல்கள் செய்வதற்கு ஏற்ற வாரம்; பொருள்வரவு குடும்ப ஒற்றுமையுண்டு; வாரத்தின்பிற்பகுதியில் காரியசித்தியும் மன ஆறுதலுமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராட 1-ம் பாதம்

பெரியோர் தரிசனத்தால் நன்மை ஏற்படக்கூடும்; குடும்பத்திலுள்ள முதியோரால் உதவியுண்டு; செய்யத் தொடங்கிய புதிய கருமத்திற் சித்தியுண்டென்று வார முடிவில் அறியவரும்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

இந்தக் கிழமை அதிகமாக முயற்சி செய்ய வேண்டும்; மனச்சாந்தியில்லை; வரவுக்கு மேற்பட்ட செலவாம்; கிழமை முடிவிற் பிறரால் உதவியுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3-ம் பாதம்

கிழமையின் முதலிரண்டு நாளும் அவதானமாக நடந்துகொள்க; உத்தியோகத்தில் அற்ப பிணக்கு, மனக்கவலை, அந்நரங்க சத்துருக்களால் இடையூறுகள் நேரக்கூடும்; எஞ்சிய நாட்களிற புதிய கருமங்களைத் தொடங்கலாம்; குடும்ப ஒற்றுமையில்லை.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இந்த வாரத்திற் சங்கடங்கள் உண்டு; செவ்வாய் புதன் கிழமைகளில் வெகு கஷ்டம் நேரக்கூடும்; எவருடனுஞ் சண்டையிட வேண்டாம்; தேக இடையூறும் நேரக்கூடும்.

## கால நிலை

இந்தவார ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திற் பல பாகங்களில் மழை பெய்தமையினால் அதுகாறும் வாடிச்சோர்ந்து நின்ற நெற்பயிர் குளிர்ச்சியடைந்து வளர்ச்சியுறலாயிற்று; ஆனாலும் இன்னமும் மழை வேணும், இடையிடையே மழைக் கோலங் காணப்படுகிறது.

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= o =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

# ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி அக்டோபர் 27**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 கும்பகோணம் என். ஸ்ரீநிவாசன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ஆங்கிலப்பேச்சு 2 தமிழில் செய்தி 2 10 ஆங்கிலப்பேச்சு 2 25 சித்ரகானம்* 2 45 முடிவு.

மாலை 5 30 கோட்டுவாத்யம் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப் பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 எம் கே தியாகராஜா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கவிச்சொல் கேளீர் 9 30 மன்னுலால் வர்மா விதார் ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு அக் 28**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி சதம்பநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 வாத்ய இசை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 நால்வகை* 2 தமிழில் செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசை நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 சிதம்பரம் ஆர் ஷண்முகசுந்தரம்பிள்ளை வீணை 5 45 அண்ணமலை நகர் வி வேதவல்லி பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 ஓர் இரவு* 7 45 ரேடியோ அறிமுகம் 8 மதுரை மாரியப்ப சுவாமிகள் பாட்டு ராமநாதபுரம் எம் என் கணேசபிள்ளை வயலின் மதுரை எல் என் விஜயாங்கம் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சிதம்பரம் ஆர் ஷண்முகசுந்தரம்பிள்ளை வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் அக். 29**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 சிதம்பரம் ஜி அம்புஜக்கரசு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 வயலின்* 2 தமிழில் செய்தி 2 10 திண்டுக்கல் எஸ் பி ரத்னம் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 பல்லடம் வி என் ராஜன் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 காளிதாஸர் கண்ட பெண்ணரசிகள் என் ஸ்ரீநிவாசசர்மா —பேச்சு 8 பல்லடம் வி என் ராஜன் புல்லாங்குழல் 8 30 எஸ் வி பார்த்தசாரதி* 8 45 ஆங்கிலப் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சிதம்பரம் ஜி அம்புஜக்கரசு பாட்டு 10 முடிவு.

பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்
உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்
விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)
சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுக்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;
விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்
மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.
விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்
மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)
ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.
விலை ரூ. 1—25 ச.

ஈழமண்டல சதகம்:
ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் ... ... ரூ. 1 00

சைவ சமயசாரம்:
ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்று யுள்ளது. விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)
சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கில மறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.
விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna,

சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலக்கடுப்பு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ஜிரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
கால்றுத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
நி 3/1 தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு

எமதுவிலாசம்
M 92

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு
எசந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
குணிமார்க் ஓடுகள்
13, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்
யாழ்ப்பாணம்

Std 2

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245 Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday October 26, 1951